

# இருளை அகற்றும் ஒரு ஒளி விளக்கு

PCVC எவ்வாறு வாழ்க்கையை மாற்றுகிறது



பரபரப்பான சென்னையில், அன்றாட வாழ்க்கையின் சலசலப்புக்கும், நகரம் முன்னேற துடிக்கும் அவசரத்துக்கும் மத்தியில், நம்பிக்கைக்கான ஒரு சரணாலயம் உள்ளது — அது தான் 'குற்ற தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பராமரிப்புக்கான சர்வதேச அறக்கட்டளை' (PCVC). நகரத்தின் கட்டமைப்பிற்குள் அமைதியாக அதே சமயம் சக்தி வாய்ந்ததாக அமைந்துள்ள இந்த அமைப்பு, இருண்ட காலத்தை எதிர்கொண்ட பெண்களுக்கு ஒரு உயிர்நாடியாகவும், கண்ணியம், வலிமை, சந்தோஷம் நிறைந்த எதிர்காலத்தை நோக்கி அவர்களை வழிநடத்தும் ஒரு வழிக்காட்டியாகவும் இருக்கிறது.

அவசரத் தேவையும், ஆழ்ந்த அனுதாபமும் உள்ள ஒரு இடத்திலிருந்து PCVC பிறந்தது. 2001 ஆம் ஆண்டில், டாக்டர்.பிரசன்னா கெட்டுவும் அவருடன் பணியாற்றியவர்களும், இந்தியாவில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அமைப்பில் நிறைய பிரச்னைகள் இருப்பதைக் கண்டனர். முறைகேடுகளில் சிக்கி இருக்கும் பெண்கள், வெளியில் ஏதும் சொல்ல முடியாமல் அமைதியாக தவிப்பதையும், எங்கும் உதவி கேட்க முடியாமலும் இருப்பதை அவர்கள் கண்டனர். இதயத்தை உலுக்கும் இந்த நிகழ்வுகளை மாற்றத் தீர்மானித்து, அவர்கள் PCVC-ஐ நிறுவினர்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கும் எளிமையான ஆனால் சக்திவாய்ந்த பணிக்காக PCVC தொடங்கப்பட்டது" என்று டாக்டர்.கெட்டு நினைவு கூர்ந்தார். "பெண்கள் தங்குவதற்கான இடம் மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கு தேவையான உணர்வு மற்றும் சட்டபூர்வமான ஆதரவையும் தரக்கூடிய ஒரு சரணாலயத்தை உருவாக்க நாங்கள் விரும்பினோம்."

PCVC, பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு பாதுகாப்பானப் புகலிடங்களை வழங்க, சென்னை முழுவதும் பல தங்குமிடங்களை நடத்துகிறது. இந்த தங்குமிடங்கள் வெறும் கட்டிடங்கள் அல்ல; அங்கு இருக்கும் பெண்களுக்கு ஆதரவான சூழல் அளிக்கும் இடமாகும். ஒரு PCVC தங்குமிடத்திற்குள் நுழையும் பெண்களை, அங்கு இருக்கும் பரிவான ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள், அவர்களை கனிவுடன் வரவேற்று, அவர்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை, ஆலோசனை மற்றும் சட்ட உதவியும் வழங்குகின்றனர்.

PCVC, குடும்ப வன்முறையில் இருந்து தப்பியவர்களின் பன்முகத் தேவைகளை நிவர்த்தி செய்ய பல்வேறு சேவைகளை வழங்குவதால், PCVC- யின் அணுகுமுறை முழுமையானது என்று சொல்லலாம். அதோடு, PCVC பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடி உதவியாக, இரண்டு ஹெல்ப்லைன் களையும் (1800 102 7282) / (044-43111143) மற்றும் 9840888882-யில் chat ஆதரவையும் 24 மணி நேரமும் வழங்குகிறது. உடனடி பாதுகாப்பு தேவைப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தற்காலிகமாக தங்கும் இடங்களும் உள்ளன. உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மருத்துவ பரிசோதனைகள், சிகிச்சைகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்தல், போலீஸிடம் புகார் தாக்கல் செய்தல், தடை உத்தரவுகளைப் பெறுதல் மற்றும் நீதித்துறை செயல்பட வேண்டிய வழிமுறைகள் போன்ற பல்வேறு ஆதரவு பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் தாங்கள் எதிர்கொண்ட அதிர்ச்சியிலிருந்து மீண்டு, சுயமரியாதையுடன் வாழ்வதற்கு வேண்டிய மன ரீதியான ஆலோசனைகள், தனி நபருக்கும், குழுவுக்கும் வழங்கப்படுகின்றன.

டாக்டர் கெட்டு விளக்குகிறார், “பெண்கள் நிதி சுதந்திரத்தை அடைய தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு உதவிகளையும் வழங்குகிறோம். பெண்கள் தங்கள் தேவைகளை தாங்களே கவனைத்துக் கொள்ள ஏதுவாக தையல், கணினி கல்வியறிவு மற்றும் சிறிய அளவிலான தொழில்முனைவு போன்ற திறமைகள் அவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன". குடும்ப வன்முறையில் இருந்து தப்பிய பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் குறிப்பிட்ட தேவைகளை சமாளிக்க PCVC, பல சிறப்பு திட்டங்களையும் உருவாக்கியுள்ளது.

**விடியல்:** (VIDIYAL) இந்த திட்டம் தீக்காயம் அடைந்த பெண்களின் மறுவாழ்வில் கவனம் செலுத்துகிறது. கடுமையான தீக்காயங்களால் கஷ்டப்பட்ட பெண்களுக்கு, தங்கள் வாழ்க்கையை மீண்டும் நன்றாக வாழ உதவும் மருத்துவ உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது.
**ஸ்மைல்ஸ் :** (SMILES) குடும்ப வன்முறையில் இருந்து தப்பிய பெண்களுக்கு உளவியல் ஆலோசனை மற்றும் சமூக ஆதரவு சேவைகளை வழங்கி, அவர்கள் எதிர்கொண்ட அதிர்ச்சியை சமாளிக்கவும், மீண்டும் நல்வாழ்வை பெறவும் உதவுகிறது.
**ஷார்ப்:** பாலியல் துன்புறுத்தல் விழிப்புணர்வு திட்டம் (SHARP) பாலியல் துன்புறுத்தலை எதிர்கொள்ளும் பெண்களுக்கு, கல்வி கற்க தேவை யான ஆதரவு அளிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், சட்ட ஆதரவு மற்றும் உளவியல் ஆலோசனைகள் வழங்குவதும் உள்ளடங்கியுள்ளது.
**க்ளாப்:** குழந்தை கல்வி மற்றும் பாதுகாப்பு திட்டம் (CLAPP) குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் குழந்தைகளுக்கு பாதுகாப்பாக வளரும் சூழல் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டம் குழந்தைகள் குணமடைந்து, நன்கு வளர, கல்வி, உளவியல் ஆலோசனைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவற்றை வழங்குகிறது.
**யூத் யூனைட்:** (YOUTH UNITE) இந்த முயற்சியானது குடும்ப வன்முறை மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்களை ஈடுபடுத்துகிறது. இது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் இளைஞர்கள் தங்கள் சமூகங்களில் மாற்றத்தைக் கொண்டுவரும் அதிகாரம் மிக்க வக்கீல்களாக ஆக்குவதில் கவனம் செலுத்துகிறது.

உயிர் பிழைத்த பல பெண்கள் எதிர்கொள்ளும் சட்டப் போராட்டங்களின் சிக்கல்களைப் புரிந்துகொண்டு, PCVC அவர்களுக்கு வலுவான சட்ட ஆதரவை வழங்குகிறது. PCVC-யின் சட்டக் குழு, பெண்களுக்கு போலீஸ் புகார்களைத் தாக்கல் செய்வதற்கும், தடை உத்தரவுகளைப் பெறுவதற்கும், அடிக்கடி அச்சுறுத்தும் நீதித்துறை அமைப்பை சமாளிப்பதற்கும் உதவுகிறது. மேலும், PCVC பெண்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு உதவ வேண்டிய சட்டம் பற்றிய புரிதலும், குறித்து விழிப்புணர்வு பிரச்சாரங்கள்

மற்றும் வகுப்புகள் நடத்துகிறது.
"இந்தப் பெண்களுக்கு சட்டத்தின் ஆதரவு மிகவும் முக்கியமானது" என்று டாக்டர் கெட்டு வலியுறுத்துகிறார். "பலர் தங்கள் உரிமைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை அல்லது உதவியை நாடுவதற்கு மிகவும் பயப்படுகிறார்கள். எங்கள் குழு அவர்களுக்கு சட்ட உதவியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு வேண்டிய ஆதரவையும் வழங்கி, அவர்கள் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவர்களுக்குத் துணையாக நிற்கிறது".

பெண்களுக்கு குடும்ப வன்முறையால் ஏற்படும் உளவியல் ரீதியான வடுக்கள் உடல் ரீதியிலானவை போலவே அவர்களை பலவீனப்படுத்தலாம். PCVC இந்தப் பெண்களின் மனநலத்திற்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து, அவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் அவர்கள் எதிர்கொண்ட அதிர்ச்சியிலிருந்து மீண்டு, அவர்கள் சுயமரியாதையோடு மீண்டும் வாழ ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

PCVC அதன் தங்குமிடங்களில் இருக்கும் பெண்களுக்கு மட்டுமல்லாது, அதைத் தாண்டி வெளியில் இருக்கும் பெண்களுக்கு உதவுகிறது. குடும்ப வன்முறையைத் தடுப்பதற்காக கல்வித் திட்டங்களின் மூலம் இந்த அமைப்பு சமூகத்துடன் தீவிரமாக ஈடுபடுகிறது. அவர்கள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து பாலின அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் பணியாற்றுகிறார்கள்.

"சமூக அணுகுமுறைகளை மாற்றுவது ஒரு நீண்ட கால செயல்முறையாகும்" என்கிறார் டாக்டர் கெட்டு. "இளைய தலைமுறையினருக்கும் சமூகத்திற்கும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதின் மூலம், குடும்ப வன்முறையை பொறுத்துக்கொள்ளாத கலாச்சாரத்தை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதை மற்றும் சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் புரிந்துகொள்வார்கள்."

குடும்பத்தில் நடக்கும் வன்முறையின் மூல காரணங்களை சரி செய்வதற்கு, குறிப்பாக சிறுவர்கள் மற்றும் ஆண்கள் எவ்வாறு வளர்க்கப்படுகிறார்கள் என்பதில் ஒரு பரந்த சமூக மாற்றம் தேவை, என்று டாக்டர் கெட்டு நம்புகிறார். "வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதை புரிந்துக் கொள்ள, பெண்களை மதிக்கும் வகையில் நமது மகன்களை வளர்க்க வேண்டும்," என்று அவர் வலியுறுத்துகிறார். "ஆணாதிக்கம் ஒவ்வொரு நிலையிலும் சவால் செய்யப்பட வேண்டும். ஆண் ஆதிக்கம், பெண்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற வழி வழியாக இருக்கும் முறைகளை உடைக்க ஆண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த மாற்றம் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சமத்துவம் மற்றும் மரியாதை பற்றி கற்பிக்க வேண்டும். இவற்றை வலுப்படுத்துவதில் பள்ளிகளும் சமூகங்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்".

டாக்டர் கெட்டு தொடர்கிறார், "பெண்களை மேம்படுத்துவது மட்டும் போதுமானது அல்ல; சமூகத்தை மாற்றுவதும் மிகவும் முக்கியம். குடும்ப வன்முறைக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஆண்களும் பங்கெடுக்க வேண்டும். அவர்களும் இந்த துஷ்பிரயோகத்திற்கு எதிராக நிற்க வேண்டும், அதிலிருந்து பிழைத்தவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும், மேலும் அனைவரும் கண்ணியமாகவும் அச்சமின்றியும் வாழக்கூடிய கலாச்சாரத்தை உருவாக்க பங்களிக்க வேண்டும்".

டாக்டர் கெட்டும், அவரது குழுவும் உன்னதமான பணியை செய்யும் போதும், அவர்களின் பணியை எதிர்ப்பவர்களிடமிருந்து அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் அவர் எதிர்கொள்கிறார். ஆனாலும், அவர் மனம் தளர்வதில்லை. "அச்சுறுத்தல்களும், எதிர்ப்புகளும் இந்த பயணத்தின் ஒரு பகுதியாகும்," என்று அவர் சொல்கிறார். "ஆனால் எங்களின் இலக்கு எங்களைத் தொடர செய்கிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு நல்ல தாக்கத்தை நாங்கள் காண்கிறோம், அது நாங்கள் எதிகொள்ளும் சவால்கள் அனைத்தையும் பயனுள்ளதாக்குகிறது. இந்த பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நல்வாழ்வே எங்களின் இலக்கு; எனவே எந்த அச்சுறுத்தலும் அதை நோக்கிய எங்களின் பணியை அசைக்க முடியாது" என்கிறார்.

பெண்களின் வாழ்வில் PCVC ஆற்றியுள்ள பெரும் பங்கால் நிகழ்ந்த தாக்கம் கொண்ட கதைகளே, அவர்கள் செய்யும் உன்னதமான பணிக்கு உண்மையான அளவுகோல் ஆகும். சரியான நேரத்தில் கொடுக்கும் ஆதரவால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணின் வாழ்வில் நடக்கும் மிகப் பெரிய நல்ல மாற்றம், அவர்கள் ஆற்றும் பணிக்கு ஒரு சான்றாகும். "நாங்கள் காணும் இந்த நல்ல மாற்றங்கள் எங்கள் பணியை நாங்கள் சரியாக செய்கிறோம் என்று உறுதிப்படுத்தப்படுகிறது" என்று டாக்டர் கெட்டு கூறுகிறார். "மனம் உடைந்து, பயந்து போய் எங்களிடம் வரும் பெண்கள், திரும்ப போகும் போது, புதிய திடமான உணர்வுடன், மனதுடன் மற்றும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடன் செல்கிறார்கள். பின்னர் அவர்களே, வன்முறைச் சுழற்சியில் இருந்து விடுபடுவது சாத்தியம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மையம் இருக்கிறது என்ற செய்தியைச் சமூகங்களில் பரப்புகிறார்கள்".

PCVC- யின் வெற்றியே அங்கு வேலை செய்யும் அர்ப்பணிப்பு உள்ளம் கொண்ட ஊழியர்களே; ஒவ்வொரு ஊழியரும் குடும்ப வன்முறையில் இருந்து தப்பிப்பிழைத்தவர்களின் வாழ்வை மேம்படுத்துவதே தன் பணி என உறுதியளிக்கின்றனர். அவர்களில் சஜிதா என்பவர், கடந்த பத்தாண்டு காலத்தை PCVC-யின் பணிக்காக அர்ப்பணித்து உள்ளார். சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்ற சஜிதா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவைப்படும் பல்வேறு ஆதரவளிக்கும் திட்டங்களின் அனைத்து செயல்பாட்டு அம்சங்களை மேற்பார்வையிடுவதோடு யில் சேவைக் குழுவில் முக்கியப் பங்காற்றுகிறார்.

"PCVC குழுவின் ஒரு பகுதியாக இருப்பது, ஒரு வேலை மட்டுமல்ல, அது ஒரு தேவைக்கான அழைப்பு" என்று சொல்லும் சஜிதாவின் இதயப்பூர்வமான நேர்மை பிரதிபலிக்கிறது. "அடைக்கலம் மற்றும் ஆதரவைத் தேடி எங்களிடம் வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றம் - எல்லா நாளும், நாங்கள் செய்யும் வேலையின் தாக்கத்தை நான் நேரில் காண்கிறேன். அவர்கள் நம்பிக்கையை மீண்டும் பெற்று, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி அடியெடுத்து வைக்க அவர்கள் தயார் ஆகி தைரியமாக நிற்கும் போது, அவர்களின் அந்த பயணத்தில் எங்களின் பங்களிப்பு அளவிடமுடியாத நிறைவை தருகிறது".

சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவர நினைக்கும் பெரிய உள்ளம் கொண்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் கொடுக்கும் நன்கொடைகளில் தான் PCVC இயங்குகிறது. PCVC குடும்ப வன்முறையில் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு ஆதரவு அளிக்கும் தன் இலக்கில் இருந்து மாறாமல், அதே சமயம், தங்கள் சேவை இன்னும் பல





பாதிக்கப்பட்டவருக்கு போய் சேர வேண்டும் என்று தொடர்ந்து விரிவுபடுத்தி வருவதால், இந்த அமைப்பு பல்வேறு நிறுவனங்கள்/NGO-க்கள்/சட்ட அமலாக்க அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்துள்ளது. PCVC- யின் எதிர்கால திட்டம், அதிகமான தங்குமிடங்களை நிறுவுதல், அவர்களின் பொருளாதார திட்டங்களை விரிவுபடுத்துதல் மற்றும் சமூக நலன் சார்ந்த முயற்சிகளை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

PCVC செய்யும் பணியால் தேவைப்படுபவர்களின் வாழ்வில் ஏற்படும் தாக்கமானது, அர்ப்பணிப்பு உள்ளம் கொண்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டலாகும். முழுமையான ஆதரவை வழங்குவதன் மூலமும், நல்ல சூழலை உருவாக்குவதன் மூலமும், PCVC பெண்களுக்கு வன்முறைச் சுழற்சியில் இருந்து தப்பிக்க உதவுவது மட்டுமல்லாமல், அவர்கள் வாழ்ந்து மற்றவர்களை ஊக்குவிக்கவும் உதவுகிறது. சென்னையின் மையத்தில், PCVC பெண்களுக்கான தன்னம்பிக்கை, தைரியம், மற்றும் அசைக்க முடியாத மனதிடத்தின் ஒரு அடையாளமாக நிமிர்ந்து நிற்கிறது. இதனாலேயே, அவர்கள் சென்னையின் ஒளிரும் சாம்பியன்கள் ஆவர்.

**சுபாஷிணி கோமேஸ்வரன்**